வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: நாராயணசாமி

நாள்: 02.10.2024 நேரம்: மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

தேசப்பிதா மகாத்மா காந்தியின் பிறந்த நாளையொட்டி புதுடெல்லி ராஜ்காட்டில், குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

தூய்மை இந்தியா இயக்கம், மக்கள் பங்களிப்புடன் கூடிய உலகின் மாபெரும் வெற்றி இயக்கமாக உருவெடுத்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

பழங்குடியினர் சமூகத்தை மேம்படுத்தி, அவர்களுக்கு அதிகாரமளிக்காமல் வளர்ந்த இந்தியா என்ற கனவை நிறைவேற்ற முடியாது என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் திட்டங்களை மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில், தமிழில் மொழி பெயர்க்க வேண்டும் என புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

------------------------------

***காந்தி-டெல்லி*** (11)

தேசப்பிதா மகாத்மா காந்தியின் 155ஆவது பிறந்த நாள் விழா இன்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. இந்நாளை ஒட்டி, புதுடெல்லி ராஜ்காட்டில் உள்ள அவரது நினைவிடத்தில், குடியரசுத் தலைவர் திருமதி

திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். தொடர்ந்து சர்வமத பிரார்த்தனையும் நடைபெற்றது. இந்நாளையொட்டி குடியரசுத் தலைவர் வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவில், அஹிம்சை, அன்பு உள்ளிட்ட மகாத்மா காந்தியின் போதனைகளை பின்பற்றி, நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல மக்கள் முன்வர வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

------------------------------

*மோடி-தூய்மை 1 (18)*

தூய்மை இந்தியா இயக்கம், மக்கள் பங்களிப்புடன் கூடிய உலகின் மாபெரும் வெற்றி இயக்கமாக உருவெடுத்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, தூய்மை இந்தியா இயக்கத்தின் 10ஆம் ஆண்டு நிறைவு நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் தூய்மையே சேவை இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கு ஒத்துழைப்பு அளித்த 140 கோடி இந்திய மக்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு தலை வணங்குவதாக கூறியுள்ளார். இந்நிகழ்ச்சியின் போது 9 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான சுகாதாரம் மற்றும் தூய்மை சார்ந்த பல்வேறு புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து பேசிய அவர், தூய்மை இந்தியாவை உருவாக்க, தொடர் முயற்சியின் அவசியம் குறித்து வலியுறுத்தினார். மேலும், கடந்த 15 நாட்களில், இந்த இயக்கத்தின் கீழ்,

27 லட்சத்திற்கும் மேற்பட்ட நிகழ்வுகள் நடைபெற்றதாகவும், 28 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்றதாகவும் குறிப்பிட்டார். அம்ரித் திட்டத்தின் ஒருபகுதியாக பல்வேறு நகரங்களில் குடிநீர் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார். தூய்மைப் பணிகளில் சிறப்பாக பணியாற்றிய பணியாளர்கள், விளையாட்டு வீரர்கள், தன்னார்வலர்கள்,

***மோடி-தூய்மை*** 2 (5)

**ஊடகத் துறையை சேர்ந்தவர்கள் உள்ளிட்ட அனைவரையும் பிரதமர் நிகழ்ச்சியின் போது பாராட்டினார். மகாத்மா காந்தியின் தொலைநோக்கு பார்வையை நிறைவேற்றும் வகையில், இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு பிறகும் இந்த தூய்மை இந்தியா இயக்கம் மக்கள் மனதில் நிச்சயமாக நிலைத்து இருக்கும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்தார்.**

------------------------------

***சாஸ்திரி பிறந்த தினம்*** (10)

**முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் 120ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது நினைவிடம் அமைந்துள்ள புதுடெல்லி விஜய் காட்டில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி, உள்ளிட்ட தலைவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர். நாட்டின் ராணுவ வீரர்கள், விவசாயிகள் மற்றும் சுயமரியாதைக்காக தனது வாழ்கையையே அர்ப்பணித்த முன்னாள்**

பிரதமர் லால் பகதூர் சாஸ்திரிக்கு மரியாதை செலுத்துவதாக தமது சமூக வலைதளப் பதிவில், பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

-------------------------------

*பிரதமர்-ஜார்கண்ட்* (16)

நாட்டில் பழங்குடியினர் சமூகத்தை மேம்படுத்தி, அவர்களுக்கு அதிகாரமளிக்காமல் வளர்ந்த இந்தியா என்ற கனவை நிறைவேற்ற முடியாது என பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, ஜார்கண்ட் மாநிலம் அசாரிபாக்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் தெரிவித்தார். மேலும், ஜார்கண்ட் மாநிலம் முழுவதும் உள்ள பழங்குடியினர் சமூகத்தினரை மேம்படுத்துவதற்கும், கிராமப்புற உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் கொண்டு வரப்பட்டுள்ள பல திட்டங்கள் குறித்தும் அவர் பேசினார். இந்த திட்டங்களின் மூலம் 5 கோடிக்கும் அதிகமான மக்கள் பயனடைவார்கள் என பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார். பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஜார்கண்ட் மாநிலத்திற்கு ஒருநாள் பயணம் மேற்கொண்டு, 83 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்றத் திட்டங்களை தொடக்கி வைத்தார். மேலும், 25 ஏகலைவா பள்ளிகளுக்கு அடிக்கல் நாட்டி, 40 ஏகலைவா பள்ளிகளையும் தொடக்கி வைத்தார். அசாரிபாக்கில் உள்ள வினோபா பாவே பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, திட்டப் பயனாளிகளுடன் கலந்துரையாடினார்.

-------------------------------

***முருகன்*** (11)

இந்தியாவின் 2ஆவது பழமையான, ராணுவ முகாம் அமைந்துள்ள சென்னை செயிண்ட்தாமஸ் மவுண்ட் வளாகத்தில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த விளையாட்டு மைதானத்தை, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் துவக்கி வைத்தார். முன்னதாக, தேசப்பிதா காந்தி அடிகளின் பிறந்த தினத்தை முன்னிட்டு சென்னை கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில், அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியின் போது, தமிழக ஆளுநர் ஆர்.என் ரவி உடன் இருந்தார். தொடர்ந்து, பெருந்தலைவர் காமராஜரின் நினைவு தினத்தை ஒட்டி, சென்னையில் உள்ள அவரது நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

-------------------------------

***காந்தி பிறந்தநாள்*** (15)

தேசத் தந்தை அண்ணல் மகாத்மா காந்தியின் பிறந்தநாள் விழா புதுச்சேரி அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது. கடற்கரை சாலையில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம், அமைச்சர்கள், திரு. லட்சுமி நாராயணன், திரு. ஜெயகுமார், திரு. சாய் ஜே சரவணன் குமார், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு, மாநிலங்களை உறுப்பினர் திரு. செல்வ கணபதி, அரசுக் கொறடா திரு. ஏ.கே.டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.

கே.எஸ்.பி. ரமேஷ், திரு. லட்சுமி காந்தன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலர் திரு. சரத் சவுகான், காவல் துறை இயக்குநர் ஜெனரல் ஷாலினி சிங் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். தொடர்ந்து சர்வமத பிரார்த்தனை நிகழ்ச்சியும், பாரதியார் பல்கலைக் கூட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் தேச பக்தி பாடல்களும், புதுச்சேரி கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய ஊழியர்களின் நூல் நூற்பு நிகழ்ச்சியும் நடைபெற்றன.

------------------------------

***தூய்மையே சேவை*** (18)

மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில், தமிழில் மொழி பெயர்க்க வேண்டும் என புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி கேட்டுக் கொண்டுள்ளார். இன்று புதுச்சேரியில் உள்ளாட்சி துறை மற்றும் நகராட்சிகளின் சார்பில் கம்பன் கலையரங்கில் நடைபெற்ற தூய்மையே சேவை இருவார விழாவின் நிறைவு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். முன்னதாக, இவ்விழாவில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், தாயின் பெயரில் ஒரு மரம் நட வேண்டும் என உறுதிமொழி வாசிக்க, அனைவரும் ஏற்றுக் கொண்டனர். சிறப்பான முறையில் தூய்மை பணியில் ஈடுபட்டவர்களுக்கு துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர் விருதுகளை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன்,

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. அனிபால் கென்னடி, திரு.பிரகாஷ் குமார், திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, திரு. விவிலியன் ரிச்சர்ட், புதுச்சேரி நகராட்சி ஆணையர் திரு. கந்தசாமி மற்றும் அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். விழாவில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

-------------------------------

*காமராஜர் நினைவு தினம்* (17)

பெருந்தலைவர் காமராஜரின் நினைவு தினம் புதுச்சேரி அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறை சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது. இதனையொட்டி காமராஜர் சாலை, அண்ணாசாலை சந்திப்பில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம், அமைச்சர்கள் திரு. லட்சுமி நாராயணன், திரு. ஜெயகுமார், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பில் பெருந்தலைவர் காமராஜர் நினைவு தினத்தை ஒட்டி, அம்பாள் சத்திரம் அருகே உள்ள அன்னாரின் திருவுருவச்சிலைக்கு அம்மாவட்ட ஆட்சியர் முனைவர் திரு மணிகண்டன் துணை மாவட்ட ஆட்சியர் திரு. வெங்கடகிருஷ்ணன் முதன்மை கல்வி அதிகாரி திருமதி. விஜய மோகனா செய்தி மற்றும் விளம்பரத் துறை உதவி

இயக்குனர் திரு. குலசேகரன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

------------------------------

*என்.எல்.சி* (8)

என்.எல்.சி இந்தியா நிறுவனத்தின் உற்பத்தி அடுத்த 3 ஆண்டுகளுக்குள் 3 மடங்காக உயர்த்தப்படும் என அந்நிறுவனத்தின் தலைவர் திரு. பிரசன்ன குமார் மோட்டுப்பள்ளி தெரிவித்துள்ளார். தேசப்பிதா மகாத்மா காந்தி அடிகளின் 155ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, நகர நிர்வாக அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். நிகழ்ச்சியின் போது, சிறப்பாக பணியாற்றிய 75 சுகாதார பணியாளர்கள் பாராட்டி கவுரவிக்கப்பட்டனர்.

------------------------------

*மகா ய அமாவாசை* (9)

மகாளய அமாவாசையை முன்னிட்டு இன்று புதுச்சேரியில் பொது மக்கள் கடற்கரை, சங்கராபரணி ஆற்றங்கரை உள்ளிட்ட நீர் நிலைகளில்,புனித நீராடி, முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்து வழிபட்டனர். புதுச்சேரி கடற்கரை காந்தி சிலை, வேதபுரீஸ்வரர் கோவில் குளக்கரை, முத்தியால்பேட்டையில் உள்ள பூந்தோட்டப் பகுதி, உள்ளிட்ட இடங்களிலும் ஏராளமானோர் தங்களின் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்து வழிபட்டனர். புரட்டாசி மாதத்தில் வரும் அமாவாசை மகாளய

பட்சத்தில் வருவதால் இந்த தினம் முன்னோர்களுக்கு திதி கொடுக்க சிறப்பானதாக கருதப்படுகிறது.

------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

தேசப்பிதா மகாத்மா காந்தியின் பிறந்த நாளையொட்டி புதுடெல்லி ராஜ்காட்டில், குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

தூய்மை இந்தியா இயக்கம், மக்கள் பங்களிப்புடன் கூடிய உலகின் மாபெரும் வெற்றி இயக்கமாக உருவெடுத்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

பழங்குடியினர் சமூகத்தை மேம்படுத்தி, அவர்களுக்கு அதிகாரமளிக்காமல் வளர்ந்த இந்தியா என்ற கனவை நிறைவேற்ற முடியாது என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் திட்டங்களை மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில், தமிழில் மொழி பெயர்க்க வேண்டும் என புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.